CSD / 03 /20 / 01 / 2017

சுற்றுநிருப இல – 05/2017

நஷ்டஈடுகள் பிரிவு
சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
பம்பலபிட்டிய.
2017.04

மேலதிக பணிப்பாளர் நாயகம்,

சகல பணிப்பாளர்கள் / பிரதிப் பணிப்பாளர்கள் / உதவிப் பணிப்பாளர்கள்,

தலைமையக பதவிநிலை உத்தியோகத்தர்,

சகல படைப்பிரிவுகளுக்கும் பொறுப்பான கட்டளையிடும் அதிகாரிகள் / பயிற்சிப் பாடசாலைக்கு பொறுப்பான கட்டளையிடும் அதிகாரிகள் மற்றும் கருத்திட்டங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்.

**பயங்கரவாதிகளின் தாக்குதலினால் மரணமடைந்த சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களில் தங்கிவாழும் இளம் வயதினரின் கணக்குகளை விடுவித்தல் தொடர்பாக**

இல அப 93/230/067 ஆம் இலக்க மற்றும் 1993.11.03 ஆந்திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக மரணமடைந்த சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களில் தங்கிவாழ்வோருக்கு நஷ்டஈடுகளை வழங்குவதன் அடிப்படையில் உறுப்பினரின் ஒரு பிள்ளைக்கு ரூ.18750.00 தொகை வீதம் தேசிய சேமிப்பு வங்கியின் கொள்ளுப்பிட்டி 2 ஆவது கிளையில் வைப்புச் செய்யப்பட்டு உள்ளதுடன் அவர்களின் வயது 18 வருடங்கள் பூர்த்தியானதன் பின்னர் மேற்படி தொகை உரிய தங்கி வாழ்பவருக்கு விடுவிக்கப்படும்.

02. மேற்படி பணத் தொகையினை விடுவித்துக்கொள்வதற்காக தூரப் பிரதேசங்களில் இருந்து மேற்படி தங்கிவாழ்பவர்கள் நாளாந்தம் திணைக்களத்தின் தலைமையகத்திற்கு சமுகமளித்தல் அவர்களுக்கு சிரமமான காரியம் ஒன்றாக அவதானிக்கப்பட்டுள்ளது. ஆதலால் வயது 18 வருடங்கள் பூர்த்தியாகிய தங்கிவாழ்பவர்கள் உரிய படையணிகள் தலைமையகத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தங்கிவாழ்வோரை அறிவூட்ட வேண்டியதுடன் உரிய கோப்புக் கிடைக்கப்பெற்று 07 நாட்களுக்குள் தலைமையகத்தின் நஷ்டஈடுகள் பிரிவிற்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன் பூர்த்தியற்ற கோப்புக்கள் பொறுப்பேற்கப்படமாட்டாது என்பதனையும் மேலும் அறியத்தருகின்றேன்.

01. வழங்கப்பட்டுள்ள பற்றுச்சீட்டு

02. மரணமடைந்த உறுப்பினரின் பெயர் மற்றும் உத்தியோகபூர்வ இலக்கம்

03. தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று

04. பணத்தினை விடுவிப்பதற்கான கோரிக்கைக் கடிதம் (பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கு)

05. தேசிய சேமிப்பு வங்கியின் கணக்கு இலக்கம் (மேற்படி வங்கியில் கணக்கு ஒன்று இல்லையாயின் உரிய பிரதேசத்திற்கு மிகவும் நெருங்கிய தேசிய சேமிப்பு வங்கியில் கணக்கு ஒன்றினை ஆரம்பித்து அதன் கணக்கு இலக்கம்)

06. ஏதேனும் ஓர் இடத்தில் பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அது தொடர்பாக குறிப்பிடப்பட்ட சத்தியக் கடதாசி ஒன்று

07. படைப்பிரிவு கட்டளையிடும் அதிகாரியின் பரிந்துரை

03. அதற்கமைய இனிவரும் காலங்களில் மேற்படி தங்கிவாழ்பவர்கள் திணைக்களத்தின் தலைமையகத்திற்கு சமூகமளித்தல் அத்தியவசியமற்றது என்பதுடன், கணக்கினை விடுவித்துக்கொள்ளல் மிகவும் அவசரமான தேவைப்பாடு ஒன்றாக உள்ளவர்கள் மாத்திரம் பொதுமக்கள் தினமாகிய புதன்கிழமை நாளொன்றில் முன்னர் போல் திணைக்களத்தின் தலைமையகத்திற்கு சமூகமளித்து கணக்கினை விடுவித்துக்கொள்ள முடியும் என்பதனையும் அறிவூட்டுமாறு அறியத்தருகின்றேன்.

**சந்திரரத்ன பல்லேகம**
**பணிப்பாளர் நாயகம்**

பிரதி – செயலாளர், பாதுகாப்பு அமைச்சு.